# எங்கள் காவலாம் சூசை தந்தையின்

எங்கள் காவலாம் சூசை தந்தையின்
மங்களங்கள் எங்கும் சொல்லி
இங்கு பாடுவோம் (2)
செங்கை அதிலே தங்க புஷ்பம்
தங்கக் கோலை ஏந்திடும் (2)

எங்கள் காவலாம் சூசை தந்தையின்
மங்களங்கள் எங்கும் சொல்லி
இங்கு பாடுவோம்

கன்னித் தாயாரின் பத்தா நீ அல்லோ
உன்னதமா பேறும் மாட்சி உற்ற பாக்யனே (2)
சென்னி மகுட முடி புனைந்த
மன்னர் கோத்ர மாதவா (2)

எங்கள் காவலாம் சூசை தந்தையின்
மங்களங்கள் எங்கும் சொல்லி
இங்கு பாடுவோம்

இயேசுநாதரின் செல்வத் தாதை நீ
நேசபுத்ரர் இன்று துத்யம் பாட வந்தோமே (2)
தேசம் ஒருங்கும் திசைகள் எங்கும்
ஆசை கொண்டு பாடவே (2)

எங்கள் காவலாம் சூசை தந்தையின்
மங்களங்கள் எங்கும் சொல்லி
இங்கு பாடுவோம்

தந்தை என்றுன்னை வந்து பாடினோம்
உந்தன் மைந்தர் சொந்தமென்று இன்று காத்திடாய் (2)
அந்தி காலை வந்த வேளை
வந்து உதவி தந்திடாய் (2)

எங்கள் காவலாம் சூசை தந்தையின்
மங்களங்கள் எங்கும் சொல்லி
இங்கு பாடுவோம் (2)